## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருச்செங்கோடு

முன்னிலை: திருமதி.இரா.தமிழரசி, பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருச்செங்கோடு.

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண். 175/2015
CNR.No.TNNM07-000214-2015

சுப்ரமணி . . . வாதி

/ எதிராக/

தமிழ்நாடு அரசு சார்பாக,
1. மாவட்ட ஆட்சியர், நாமக்கல்
2. வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு
3. வட்டாட்சியர், திருச்செங்கோடு
4. வருவாய் ஆய்வாளர், திருச்செங்கோடு பிர்கா
5. கிராம நிர்வாக அலுவலர், கோட்டப்பாளையம் கிராமம்,
திருமங்கலம் குரூப் கிராமம்,
திருச்செங்கோடு வட்டம். . . . பிரதிவாதிகள்

இந்த வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்கு 18.04.2023-ல் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.புஷ்பராஜு அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும் உள்ளனர். வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

### தீர்ப்புரை

பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ அல்லது முகவர்களோ வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் தாவா செலவுதொகை வழங்கக்கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

1. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:

(1) தாவா சொத்தானது கோட்டப்பாளையம் கிராம சர்வே எண்.28ல் அமைந்துள்ள நத்தம் நிலம் என்றும், அதன் விஸ்தீரணம் 30 செண்ட் உள்ளது

என்றும், வாதியின் விவசாய நிலங்களுக்கு இடையில் தாவா நத்தம் நிலமானது அமைந்துள்ளது என்றும், இது குறித்து தாவாவுடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருப்பதாகவும், சர்வே எண்கள்.27/1C மற்றும் 29/1C ல் வருவாய்துறை ஆவணங்கள் வாதி பெயரில் ஏற்பட்டு அவர் வரி செலுத்தி வருவதாகவும், தாவா சொத்தை வாதி தனது பட்டா நிலத்துடன் சேர்த்து அனுபவித்து வருவதாகவும், ஆரம்பத்தில் அதில் வீடுகளும், மாட்டு கொட்டகையும் இருந்ததாவும், பின்னிட்டு அவை சேதம் அடைந்து விட்டது என்றும், வாதி தாவா சொத்தை தனது பட்டா நிலத்துடன் சேர்த்து விவசாயம் செய்து சோளம் மற்றும் கடலை பயிர்கள் செய்து வருவதாகவும், வாதியும் அவரது முன்னோர்களும் தாவா சொத்தை தனது பட்டாவுடன் சேர்த்து அனுபவித்து வந்ததாகவும், தாவா சொத்திற்கு வாதி வரி செலுத்தி வருவதாகவும்,

(2) வாதி தாவா சொத்தில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்துள்ளதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகள் அருகிலுள்ள நில உரிமையாளர்களின் தூண்டுதலின் பேரில் வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்து வருவதாகவும், வாதி பிரதிவாதிகளை அணுகி இது குறித்து கேட்டதற்கு பிரதிவாதிகள் தகுந்த பதில் அளிக்கவில்லை என்றும், 05.06.2015 ம் தேதியன்று 5 ம் பிரதிவாதியும் அவரது உதவியாளர்களும் சட்ட விரோதமாக தாவா சொத்தில் நுழைந்து வாதியை வெளியேற்ற முயற்சி செய்ததாகவும், வாதி இதனை தடுத்து விட்டதாகவும், அப்போது பிரதிவாதிகள் வாதியை கூடிய விரைவில் வெளியேற்றி விடுவோம் என கூறிச்சென்றதாகவும், தாவா சொத்தானது நத்தம் நிலம் என்றும், இது அரசுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், வாதி தாவா சொத்தின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்திற்கு தொல்லை கொடுத்து சட்ட விரோதமாக வாதியை வெளியேற்ற முயற்சி செய்ததாகவும், பிரதிவாதிகள் அரசு அலுவலர்கள் என்பதால் அவர்கள் பலம் மிக்கவர்கள் என்றும், வாதி வயதானவர் என்றும், அவர்கள் வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்றும், எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>வாதி தரப்பு கூடுதல் வழக்குரையின் சுருக்கம்:–</u>

கோட்டப்பாளையம் கிராம சர்வே எண்.28 கோட்டப்பாளையம் காட்டு வளவு கிராம நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது உண்மை என்றும், ஆனால்மேற்படி நிலம் அரசின் பராமரிப்பில் இருப்பதாக சொல்வது பொய் என்றும், வாதி மேற்படி நிலத்தை அனுபவித்து வருவதாகவும், விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாவா நிலைக்கத்தக்கதல்ல என பிரதிவாதிகள் தரப்பில் கோரியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இவ்வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என கூடுதல் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>3ம் பிரதிவாதி தாக்கல் செய்து, 1, 2, 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், தாவா சொத்து விவரம் தவறானது என்றும், தாவா முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும், செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றும், வாதி தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டிருக்க வேண்டும் என்றும், விளம்புகை பரிகாரம் கேட்காமல் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி தாவா சொத்தில் ஒரு போதும் சுவாதீனத்திலிருந்து அனுபவித்ததில்லை என்றும், தாவா சொத்து அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், வாதி தாவா சொத்து குறித்து துர்லாபம் அடைய வேண்டியே பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், கோட்டப்பாளையம் கிராம சர்வே எண்.28 என்பது வருவாய் ஆவணங்களில் கோட்டப்பாளையம் காட்டுவளவு கிராம நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கின் வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றும், எனவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என பதிலுரை தாக்கல் செய்துள்ளனர்.

4. <u>வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதா?
2. தாவா சொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கப்படாததால் இந்த வழக்கு ஏற்கத்தக்கதல்ல என்பது சரியா?
3. வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிக்கு வேறென்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

6. எழுவினா 1 மற்றும் 2– க்கான தீர்வு:

- தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதா?
- தாவா சொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்கப்படாததால் இந்த வழக்கு ஏற்கத்தக்கதல்ல என்பது சரியா?

(1) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. தாவா சொத்தானது கோட்டப்பாளையம் கிராம சர்வே எண் 28 இல் உள்ள நத்தம் என் நிலம் என்றும், மேற்படி நிலத்தை வாதியும் அவரது முன்னோர்களும் தங்கள் விவசாய நிலங்களுடன் சேர்த்து பயிர் செய்து அனுபவித்து வருவதாகவும், மேற்படி நிலத்தில் ஆழ்துளை கிணறு வெட்டி வாதியின் விவசாய நிலத்திலிருந்து மின் இணைப்பு மூலமாக மேற்படி ஆழ்துளை கிணற்றிலிருந்து நீர் எடுத்து தனது விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தி வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகள் 05.06.2015 அன்று தாவா சொத்தில் நுழைந்து வாதியை வெளியேற்ற முயற்சி செய்ததாகவும், எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(2) பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது நத்தம் நிலம் என்றும், இது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், வாதி ஒருபோதும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும், எனவே தாவா நிலைக்கத்தக்கதல்ல என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்தில் சுவாதீனத்தில்

இருப்பதை நிரூபிக்க வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணமானது கணினி பட்டா. மேற்படி பட்டாவானது வாதியின் விவசாய நிலமான சர்வே எண்.29/1C, 27/1C நிலங்களுக்கு உரியது. மேற்படி பட்டாவானது வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ளது. மேற்படி நிலங்களுக்கு இடையில் தான் தாவா சொத்து அமைந்திருப்பதாகவும், அதை வாதி தனது விவசாய நிலங்களுடன் சேர்த்து அனுபவம் செய்து வருவதாகவும் வாதிட்டார்.

(3) மேலும் தாவா சொத்தில் இருந்து வாதியை வெளியேறும்படி விளக்கம் கேட்டு வாதிக்கு நில வருவாய் அலுவலர் திருச்செங்கோடு அவர்கள் அறிவிப்பு அனுப்பி உள்ளார். 30.09.1974 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பின் படி தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருப்பதாகவும், அவரை மேற்படி சொத்திலிருந்து வெளியேறும்படி கூறி 1974 ஆம் வருடமே அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும் வாதிட்டார். வா.சா.ஆ.4 ஆவணமானது வாதி தனது விவசாய நிலத்துடன் சேர்த்து தாவா சொத்திற்கும் தீர்வை செலுத்தி வந்ததற்கான கந்தாய ரசீதுகள். வா.சா.ஆ.5 தாவா சொத்தில் வாதி ஆழ்துளை கிணறு அமைத்திருப்பதாகவும், அதன் புகைப்படத்தை குறுந்தகட்டுடன் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருக்கிறார் என்பதும் மேற்படி நிலத்தை 1974 ஆம் வருடத்திற்கு முன்பு இருந்தே தனது அனுபவத்தில் வைத்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் திருச்செங்கோடு நில வருவாய் அலுவலர் 1974 ஆம் வருடமே வாதிக்கு தாவா சொத்திலிருந்து வெளியேறும்படி கூறி அறிவிப்பு அனுப்பியுள்ளார். பின்னிட்டு மேற்படி நடவடிக்கையானது முழுமை பெறாமல் கைவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதி தரப்பில் பிரதிவாதிகள் 05.06.2015 ல் தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்ற முயற்சி செய்ததாகவும், எனவே தன்னை சட்டத்தின்படி மட்டுமே வெளியேற்ற வேண்டும் என்றும், அவ்வாறு இல்லாமல் தனது சுவாதீனத்திற்கு தொல்லை கொடுக்கக் கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான

ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில் தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தில் உள்ளது என எழுவினா 1–க்கு தீர்வு காண்கிறேன்.

(4) வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளதாகவும் தன்னை தாவா சொத்திலிருந்து சட்டப்படி அல்லாமல் வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட நிலம் என்றும், மேற்படி நிலம், வருவாய் துறை அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதியானவர் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டு அவரை வெளியேறும்படி அறிவிப்பு அனுப்பியுள்ளனர். மேலும் தாவா சொத்திற்குரிய தீர்வை வரியை வாதியிடமிருந்து வசூல் செய்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. மேலும் வாதி தன்னை சட்டத்தின்படி அல்லாமல் சட்டத்திற்கு விரோதமாக வெளியேற்றக் கூடாது என இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளார். மேலும் தாவா சொத்தானது கிராம நத்தம் என்றும் அதை தனது விவசாய நிலங்களுடன் சேர்த்து அனுபவித்து வருவதாகவும் வாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தாவா சொத்து குறித்து வாதி விளம்புகை பரிகாரம் கேட்க அவசியம் இல்லை என எழுவினா இரண்டுக்கு தீர்வு காண்கிறேன்.

7. <u>எழுவினா 3 க்கான தீர்வு:</u>

- வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

(1) வாதி தரப்பில் தனது முன்னோர்கள் காலத்திலிருந்து தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், தாவா சொத்திற்குரிய தீர்வை ரசீதுகளை வாதி செலுத்தி வருவதாகவும், எனவே தாவா சொத்தில் தனது சுவாதீனத்திற்கு தொல்லை கொடுக்கக் கூடாது எனக்கோரி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் கிராம நத்தம் நிலம் என்பது அரசுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், மேலும் மேற்படி நிலத்தை அனுபவித்து வருப்பவர்களுக்கே மேற்படி நிலமானது சொந்தம் என்றும், மேலும் கிராம நத்தம் நிலத்தில் கட்டிடம் கட்டி அனுபவம் செய்வதோடு மட்டும் அல்லாமல்

அதை கையகப்படுத்தி தனது வசம் வைத்து இருப்பவர்களுக்கும் மேற்படி நிலமானது பாத்தியப்பட்டது என்றும், கிராம நத்தம் நிலமானது அரசுக்கு பாத்தியப்பட்டது அல்ல எனவும் வாதிட்டார்.

(2) மேற்படி வாதத்திற்கு ஆதரவாக 2012-4-L.W.759 கணபதி எதிராக பாலகிருஷ்ணன் என்ற வழக்கின் தீர்ப்பை முன்னிறுத்தி மேற்படி வழக்கில் நத்தம் நிலம் என்பது அரசுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், மேற்படி நிலத்தை அனுபவம் செய்பவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதிட்டார். மேலும் மேற்படி நிலத்தின் உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமே போதுமானது என்றும் வாதிட்டார்.

"When a property has been described as 'gramanatham' the land never vested with the Government and it belongs to the persons, who occupy and construct the building – Any one who constructed the building in that property is entitiled to claim right over the same".

"It is not necessary that in a suit for injunction or for recovery of possession, the plaintiff shall also pray for declaration – If the plaintiff is able to prove his title to the suit properties, then the plaintiff is entitiled to the relief for permanent injunction and for recovery of possession". என மேற்படி வழக்கில் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில் வாதியும் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதை நிரூபித்துள்ளார். மேலும் கிராம நத்தம் நிலத்தில் சுவாதீனத்தில் இருப்பவர்களுக்கே மேற்படி நிலமானது பாத்தியப்பட்டது என்ற நிலையில் வாதி தாவா சொத்தின் மீதுள்ள தனது உரிமையை நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்நிலையில் மேற்படி வழக்கில் கண்டுள்ள தீர்ப்பின் படி வாதி தாவா சொத்தில் விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் வாதியை 1974 ஆம் வருடமே தாவா சொத்திலிருந்து ஏன் வெளியேற்றக் கூடாது என கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகளுக்கு சட்டத்தின்படி வாதியை வெளியேற்ற உரிமை உள்ளது. மேலும் வாதியும்

இவ்வழக்கில் தன்னை சட்டத்தின்படி மட்டுமே வெளியேற்ற வேண்டும் என்றும், அவ்வாறு அல்லாமல் தனது சுவாதீனத்திற்கு தொல்லை கொடுக்கக் கூடாது என பரிகாரம் கோரியுள்ளார்.

(3) இதுகுறித்து பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த கோட்டப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் தனது குறுக்கு விசாரணையில்,

"வாதி இவ்வழக்கில் சர்வே எண் 28 இல் அனுபவம் செய்து வருவதாகவும், அவரது அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என கேட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் சரியானது என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் முழுவதும் அவரது அனுபவத்தில் இல்லை. சர்வே எண் 28 இல் ஒரு பகுதியில் அனுபவத்தில் இருக்கிறார் சுமார் 20 செண்ட் இடம் இருக்கும்" என சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அவர் "நான் சொல்லியுள்ள சுமார் 20 செண்ட் என்பது சரியான அளவா என அளவீடு செய்து பார்த்தால் தான் தெரியும் வாதியின் அனுபவத்தில் இருப்பது 30 செண்ட் இருக்கலாம்" என சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளித்த பி.சா.1 வாதி தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சிகளும் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளனர். இந்நிலையில் வாதியின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

8. <u>எழுவினா 4–க்கான தீர்வு:</u>

- வாதிக்கு வேறென்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்துள்ள நிலையில் இவ்வழக்கின் செலவுத்தொகையை பெறவும் வாதிக்கு உரிமை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

9. <u>இறுதியாக,</u>

இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் நேரிடையாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

R TAMILARASI
Digitally signed by R TAMILARASI
Date: 2023.04.22 13:54:18 -0800

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருச்செங்கோடு.**

<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>
வா.சா.1 – சுப்ரமணி
வா.சா.2– ஜெயலட்சுமி
வா.சா.3– முருகேசன்

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>
பி.சா.1– வெண்ணிலா

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.06.2015 | கணினி பட்டா எண்.26 | அசல் |
| வா.சா.ஆ.2 | 16.06.2015 | கணினி பட்டா எண்.78 | அசல் |
| வா.சா.ஆ.3 | 30.09.1974 | வெளியேற்ற அறிவிப்பு | சார்வு நகல் |
| வா.சா.ஆ.4 | -- | கந்தாய ரசீதுகள் (எண்ணிக்கை 7) | அசல் |
| வா.சா.ஆ.5 | 08.03.2010 | புகைப்படம், குறுந்தகடு மற்றும் ரசீது | அசல் |
| வா.சா.ஆ 6 | 15.10.2015 | 1ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய குறிப்பாணை | சார்வு நகல் |
| வா.சா.ஆ 7 | 18.08.2016 | 2ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய குறிப்பாணை | சார்வு நகல் |
| வா.சா.ஆ 8 | 08.11.2016 | 1ம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து மாவட்ட வருவாய் அலுவலரால் வாதிக்கு அனுப்பிய குறிப்பாணை | சார்வு நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.9 | -- | சர்வே எண்.28 க்கான புலவரைபடம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.10 | -- | அடங்கல் | உண்மை நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ 1 | -- | சர்வே எண்.28 க்கான அ பதிவேடு | உண்மை நகல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2023.04.22 13:54:32 -0800

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருச்செங்கோடு.**

அசல்/வரைவு/தீர்ப்புரை
அ.வ.எண்.175/2015
நாள்: 21.04.2023